**20.11.2014**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை: தமிழகத்தில் இன்று முதல் மீண்டும் மழை</u>



வங்கக் கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக, தமிழகத்தில் வியாழக்கிழமை (நவம்பர் 20) முதல் மீண்டும் மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது: நிலநடுக்கோடு அருகில் உள்ள இந்தியப் பெருங்கடல், அதையொட்டியுள்ள தென் வங்கக் கடல் பகுதிகளில் புதிதாக காற்றழுத்தத் தாழ்வு நிலை ஒன்று உருவாகியுள்ளது. இது மேற்கு நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக, வரும் நாள்களில் தெற்கு கடலோரம், டெல்டா மாவட்டங்களில் அதிக மழை பெறும் வாய்ப்புள்ளது. லட்சத்தீவு அருகே உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. புதன்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் ராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் அதிகபட்சமாக 100 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தஞ்சை மாவட்டம் மடுக்கூர், ராமேஸ்வரத்தில் தலா 70 மி.மீ, ராமநாதபுரம், கமுதியில் தலா 60 மி.மீ, சீர்காழி, திருத்துறைப் பூண்டி, ஆலங்குடி, சிதம்பரம், வேதாரண்யம், குடவாசல், பட்டுக் கோட்டை, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் தலா 50 மி.மீட்டர் மழை

பதிவாகியுள்ளது என்றார் அவர். முன்னறிவிப்பு: அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களான ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகை, புதுக்கோட்டையில் அனேக இடங்களில் கன மழை பெய்யும். அதேபோல, உள் மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## <u>முல்லைப் பெரியாறு: இன்று 142 அடியை எட்டும்</u>



முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மீண்டும் சாரல் மழை தொடங்கியுள்ளதால், வியாழக்கிழமை காலையில் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டும் என பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் கடந்த 5 நாள்களாக மழை இல்லை. எனவே, கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து அணையின் நீர்மட்டம் 141 அடியாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில், கடந்த 2 நாள்களாக பாசனத்துக்காக திறக்கப்படும் தண்ணீர் முழுவதும் நிறுத்தப்பட்டு, தேனி மாவட்ட குடிநீருக்கு மட்டும் நொடிக்கு 147 கன அடி தண்ணீர் இறைச்சல் பாலம் வழியாக திறந்து விடப்பட்டு வருகிறது. தற்போது, அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சாரல் மழை பெய்யத் தொடங்கியுள்ளது. இதனால், அணைக்கு நீர்வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலைக்குள் 142 அடியை எட்டுவிடும் என எதிர்பார்த்து மதுரை வைகை- பெரியாறு பொதுப் பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் ராஜேஷ், அணையின் செயற் பொறியாளர் மாதவன்,

உதவிச் செயற் பொறியாளர் சௌந்தரம் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட பொறியாளர்கள், தொழிலாளர்களும் அணைப் பகுதியில் முகாமிட்டுள்ளனர். இதுவரை, தமிழக பொதுப் பணித் துறை அதிகாரிகள், கேரள அரசுக்கு இரண்டு கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர். மூன்றாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை, 142 அடியை எட்டுவதற்கு முன்னர், 6 மணி நேரத்தில் இருந்து 8 மணி நேரத்துக்கு முன்னரே விடுக்குமாறு, கேரள தலைமைச் செயலரும், இடுக்கி மாவட்ட ஆட்சியருமான அஜீத்குமார் பாட்டீல் கேட்டுக் கொண்டுள்ளார். புதன்கிழமை மாலை 7 மணி நிலவரப்படி, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 141.70 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 928 கன அடியாகவும், அணையிலிருந்து தமிழகத்துக்கு குடிநீருக்காக நொடிக்கு 147 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டும் வருகிறது. அணையின் மொத்த நீர் இருப்பு 7,545 மில்லியன் கன அடியாக உள்ளது.

<u>**விவசாயிகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை**</u>

விவசாயிகளின் வளர்ச்சிக்கு மத்திய, மாநில அரசுகள் முன்னுரிமை அளித்துச் செயல்பட வேண்டும் என்று, கர்நாடக ஆளுநர் வஜூபாய் வாலா கேட்டுக் கொண்டார். பெங்களூரு ஜி.கே.வி.கே. வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண் கண்காட்சியைத் தொடக்கிவைத்து அவர் பேசியது: நாடு சுதந்திரம் பெற்ற போது கிராமங்களில் 80 சதம், நகரங்களில் 20 சதம் மக்கள் வசித்து வந்தனர். தற்போது 35 சதம் பேர் நகரங்களிலும், 65 பேர் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். விளை நிலங்களில் குடியிருப்புகள், தொழில்சாலைகள் அதிகரித்து வருவதால் வேளாண் தொழில் நசிந்து வருகிறது. இதனால், விவசாயிகள் நகரங்களில் குடிபெயர்ந்து வருகின்றனர். விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்து விவசாயிகளின் வளர்ச்சிக்கு மத்திய, மாநில அரசுகள் தேவையான உதவிகளை செய்ய முன்வர வேண்டும்.

விளைபொருள்களுக்கு உரிய விலை, ஏற்றுமதி, நீர்ப்பாசனம் உள்ளிட்டவைகளுக்கு உதவ வேண்டும். இஸ்ரேல் நாட்டில் குறைந்த அளவு பெய்யும் மழைநீரையும் சேமித்து விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். குஜராத்தில் மக்கள் பிரதிநிதிகள், விஞ்ஞானிகள், பொறியாளர்கள் ஆண்டுக்கு ஒருமுறை குறிப்பிட்ட மாதத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று விவசாயிகளிடம் நலம் விசாரித்து, பயிரிடுவது குறித்த விவரங்களை அறிந்து கொள்வார்கள். இதேபோல, கர்நாடகத்திலும் வேளாண் தொழிலுக்கு முன்னுரிமை அளிக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். விவசாயிகள் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே நாடு வளம் பெறும் என்றார் அவர். நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் கிருஷ்ண பைரேகெப்டா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## <u>கர்நாடகத்தில் "வேளாண் பாக்யா' திட்டம்</u>

கர்நாடகத்தில் விவசாயிகளுக்காக "வேளாண் பாக்யா' திட்டம் விரைவில் அமல்படுத்தப்படும் என்று, அந்த மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் கிருஷ்ண பைரே கெப்டா தெரிவித்தார். இதுகுறித்து பெங்களூருவில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கர்நாடகத்தில் காங்கிரஸ் அரசு பொறுப்பேற்ற பிறகு, ஏழைகளுக்கு உதவும் வகையில் இலவச அரிசி வழங்கும் "அன்னபாக்யா திட்டம்' செயல்படுத்தப்பட்டது. இதனால், ஏழைகள் பலர் பயனடைந்து வருகின்றனர். இதேபோல, விவசாயிகள் பயனடையும் வகையில் "வேளாண் பாக்யா' திட்டம் தொடங்கப்படும். இதன்மூலம், விவசாயிகள் ரூ. 2 லட்சம் வரை உதவித்தொகை பெற முடியும். இதற்காக ரூ. 500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், மழை நீரைத் தேக்கி வைக்கவும், சொட்டு நீர்ப் பாசனத்திற்கும் விவசாயிகள்

உதவித்தொகை பெற முடியும். நெல் அறுவடை செய்யவும், கதிர் அடிக்கவும் ஒன்றிய அளவில் வேளாண் இயந்திரங்கள் அமைக்கப்படும்.

மண்ணின் தரத்தைத் தெரிந்து கொள்ள விவசாயிகளுக்கு மண் பரிசோதனை அட்டை வழங்கப்படும். அதன்மூலம், எந்த மண்ணில் எந்த வகையான பயிரை நடவு செய்யலாம் என விவசாயிகள் தெரிந்து கொள்ள முடியும். விளைபொருள்களுக்கு ஆதரவு விலை நிர்ணயித்து, அதை அரசே கொள்முதல் செய்யும் திட்டத்திற்கு ரூ. 2 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வறட்சி, மழைச் சேதத்திற்கு இழப்பீடு அளிப்பதற்காக மத்திய அரசிடம் நிதி கோரியுள்ளோம். இதனிடையே, மத்திய அரசு இழப்பீடு வழங்க தாமதித்து வருவதால், மாநில அரசே 2014-15-ஆம் நிதியாண்டிற்கு விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க ரூ. 537 கோடி ஒதுக்கியுள்ளது என்றார் அவர்.

## <u>தீவனப்புல் வளர்க்கும் திட்டம் ஆய்வு</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் தீவனப்புல் வளர்க்கும் திட்டத்தை வேளாண் துறை இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான், புதுவாழ்வு திட்ட மேலாளர் வசுமதி ஆகியோர் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தில் தீவனப்புல் வளர்க்கும் திட்டத்தை மாநில திட்ட இயக்குநரகம் அறிவித்துள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோயில் ஒன்றியம் மூட்டாம்பட்டி கிராமத்துக்கு நேரில்சென்ற வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான், புதுவாழ்வு திட்ட மேலாளர் எஸ். வசுமதி ஆகியோர் புல் வளர்ப்பதற்கான சாத்திய கூறுகள், நிலத்தின் தன்மை ஆகியவை குறித்து கள ஆய்வு மேற்கொண்டனர். பின்னர் புதுவாழ்வுத் திட்டம் செயல்படும் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒரே தொழில் செய்யும் எளிய குடும்பத்தைச் சேர்ந்த 70 உறுப்பினர்களை இணைத்து ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது. அதன்படி மூட்டாம்பட்டி

கிராமத்தில் 50 நபர்களை கொண்ட கறவை மாடு வளர்ப்போர் குழு அமைக்கப்பட்டது. பசும்புல் வளர்க்க தேவையான உதவிகள் செய்வதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார் வேளாண் இணை இயக்குநர் கூறினார். ஏற்பாடுகளை புதுவாழ்வு திட்ட உதவி திட்ட மேலாளர்கள் செந்தில்முருகன் (கிராமநிதி), நடராஜன் (வாழ்வாதாரம்), மூட்டாம்பட்டி ஊராட்சித் தலைவர், கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஊராட்சி அளவிலான மகளிர் குழுக்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## <u>மழைக்கால நோய்களில் இருந்து நெல் பயிர்களைப் பாதுகாப்பது எப்படி?</u>



பருவநிலை மாற்றத்தால் மழைக் காலத்தில் பயிர்களைத் தாக்கும் நோய்களைக் கண்டறிந்து முறையான பராமரிப்பு மேற்கொண்டால் பயிர்களைப் பாதுகாக்கலாம். நடப்பு சம்பா பருவத்தில் நெல் பயிர் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி நெல் பயிர்கள் 30 முதல் 45 நாள்கள் வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ளன. தொடர்ந்து விட்டு, விட்டு பெய்த மழையினாலும், சிதோஷண நிலை மாற்றத்தாலும் பூச்சி, நோய்த் தாக்குதல்களில் பயிர் சேதமடையும். மேலும் நெல் பயிரை இலைச் சுருட்டுப் புழு, குருத்துப் பூச்சி, பாக்டீரியா வினால் ஏற்படும் இலை கருகல் நோய் போன்றவை அதிக அளவில் சேதப்படுத்தி வருகின்றன. இதையொட்டி விவசாயிகள் இந்தப் பருவத்தில் தங்களது பயிர்களை கவனமாக கண்காணித்து முறையாகப் பராமரிக்க வேண்டும். இதுகுறித்து பூந்தமல்லி வட்டார வேளாண் உதவி இயக்குநர் உமாதேவி கூறியது:

நெல் பயிர்களுக்கு இந்தப் பருவத்தில் பூச்சியின் தாக்கம் அதிகளவில் இருக்கும்.உதாரணமாக, இலைச் சுருட்டுப் புழுக்கள் மெல்லிய இழை

கொண்டு இலைகளை மடித்து இலையின் உள்ளே சென்று பச்சையத்தை சுரண்டி சாப்பிடுவதால் இலைகள் வெண்ணிறமாக மாறிவிடும். இதன் தாக்குதல் வழக்கமாகும்போது பயிரின் வளர்ச்சிக் குன்றி மகசூல் குறைந்து விடும். இதேபோல், இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதலும் இந்தப் பருவத்தில் அதிகரிக்கும். இவை ஆண் அந்துப் பூச்சி இனம் மஞ்சள் நிறத்தில் முன் இறக்கையில் கரும்புள்ளி காணப்படும். பெண் அந்துப்பூச்சி இலையின் மேற்பாகத்தில் முட்டையிட்டு முட்டை குவியல்களை வெண்ணிறப் பஞ்சியால் மூடிவிடும். முட்டையிலிருந்து வெளிவரும் இளம் பூச்சிகள் இலையின் பச்சையத்தை சுரண்டி சாப்பிடும். வளர்ந்த புழுக்கள் தண்டின் அடிபாகத்தில் சிறு துவாரமிட்டு தண்டின் உள்ளே சென்று சதைப் பகுதியைத் தின்றுச் சேதப்படுத்தும். மேலும், புழுக்கள், அதன் கழிவுகள் உள்ளே காணப்படும். இதன் தாக்குதலால் இளம் பயிரின் நடுக் குருத்து காய்ந்து விடும். தண்டு வளரும் பருவத்தில் அதாவது கதிர் உருவாகும் பருவத்தில் தாக்குவதால் வெளிவரும் கதிர்கள் வெண்கதிர்களாக மாறிவிடும். இதனால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. எனவே இதுபோன்ற பாதிப்புகளைக் கட்டுப்படுத்த, விளக்குப் பொறி வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். முட்டை குவியல்களை சேகரித்து அழிக்க வேண்டும். முட்டை ஒட்டுண்ணியை ட்ரைகோலிராமா ஜப்பானிக்கம் இட்டுத் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். மேலும், பூச்சியின் தாக்குதல் அதிகமாகும்போது குளோரிபை ரீபாஸ் 20 (500 மில்லி லிட்டர் அளவு) அல்லது ட்ரையசோபாஸ் 40 (250 மில்லி லிட்டர் அளவு) ஆகிய மருந்துகளில் ஏதாவது ஒன்றை கைத்தெளிப்பான் கொண்டு காலை, மாலை வேளையில் தெளிக்க வேண்டும். நெல்லில் பாக்டீரியா இலை கருகல் நோய்: பாக்டீரியா இலைக் கருகல் நோய் என்பது காற்று, மழை நீரால் இலைகள் ஒன்றோடு ஒன்று, உராய்வதன் மூலம் பரவுகிறது. நெல் பயிரின் இலைகளின் ஓரங்கள், நடு நரம்புப் பகுதியில் இருப் புள்ளிகள் தோன்றி, பிறகு அதிகப் பெரியதாக மாறி இலைக் கோடுகளை ஏற்படுத்தும். பின்பு இலைகள்

மஞ்சள் நிறமாக மாறி காய்ந்து விடும். இவற்றை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு 500 கிராம் எடுத்துக் கொண்டு இதனுடன் ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட், டெட்ரா சைக்கிளின் சல்பேட் ஒரு ஏக்கருக்கு 120 கிராம் சேர்த்து தெளித்து இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம். இதேபோல் பருவத்துக்கேற்ப பூச்சித் தாக்குதலைக் கண்டறிந்து முறையாகப் பராமரிப்பதன் மூலம் விவசாயிகள் முழுமையாகப் பயனடையலாம் என்றார்.

**<u>தீவனப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்: கால்நடை விவசாயிகளுக்கு வரப்பிரசாதம்</u>**



கால்நடை விவசாயிகள் லாபகரமான வகையில் பால் உற்பத்தி செய்யும் வகையில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப் பயிர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுகுறித்து மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையினர் கூறியதாவது: இப்போது கால்நடைகளின் பசுந்தீவனத் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உள்ளது. எனவே தீவனப் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் கடந்த 3 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் கால்நடைத் துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. அரசுத் திட்டங்கள் பின்வருமாறு (திட்டத்தின் இனங்களும், அதைப் பெறுவதற்கான தகுதிகளும், நிபந்தனைகளும்): அதிக மகசூல் தரக் கூடிய தீவனப்பயிர் சாகுபடி (இறவையில் 0.25 ஏக்கர் பரப்பில் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்

சாகுபடிக்கு ரூ.2 ஆயிரம் மானியம்): கால்நடை வளர்ப்பவராக இருந்து குறைந்தபட்சம் 0.25 ஏக்கர் பரப்பில் இறவையில் 3 ஆண்டு களுக்கு தீவனப் பயிர் சாகுபடி செய்ய பாசன வசதி உள்ளவராக இருத்தல் வேண்டும். குத்தகைதாரராக இருந்தால் குத்தகை காலம் குறைந்தபட்சம் 3 ஆண்டுகளாக இருப்பின் மேற்கண்டவாறு இறவையில் தீவனப்பயிர் வளர்ப்பவராக இருத்தல் வேண்டும். அரசின் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகளுக்கு நிலம் இருந்து 3 ஆண்டுகள் தீவனப் பயிர் சாகுபடி செய்து பராமரிப்பு செய்பவராக இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும். மேற்கண்ட தகுதி உள்ள சிறு, குறு, ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். தீவனச் சோளம், தட்டைப் பயறு சாகுபடி (மானாவாரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம், தட்டைப் பயறு சாகுபடிக்கு விதைகள் மானியம்): மானாவாரியில் தீவனப் பயிர்களான சோளம், தட்டைப் பயறு வளர்க்க முன்வர வேண்டும். அரசின் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பல்லாண்டு தீவனப் பயிருக்கு தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்குதல் (விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.18 ஆயிரத்து 750 மானியம்): குறைந்தபட்சம் 1 ஏக்கர் பரப்பில் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கும் குறையாமல் பல ஆண்டு தீவனப் பயிர் சாகுபடி செய்பவராகவும், நல்ல நீர் ஆதாரம் உள்ள ஆழ்குழாய் கிணறு, திறந்தவெளி கிணறு உள்ளவராக இருத்தல் வேண்டும். வேறு எந்த அரசுத் திட்டத்தின் கீழ் இந்த மாதிரியான இனங்களில் பயன் பெறாதவராக இருத்தல் வேண்டும். அதிக மகசூல் தரக் கூடிய தீவனப்பயிர் சாகுபடி இனத்தில் குறைந்தபட்சம் இறவையில் 1 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்து பயன்பெற்று இருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். அகத்தி மர வகை தீவன பயிர் சாகுபடி (அகத்தி விதைகள் 100 சதவீதம் மானியம்): கால்நடை வளர்ப்பவராக இருந்து அகத்தி வளர்க்க முன்வருபவர்கள். அதிக மகசூல் தரக் கூடிய தீவனப் பயிர்

சாகுபடி திட்டத்தில் பயன்பெற்றவராக இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும். அசோலா சாகுபடி (ரூ.1,600 மானியம்): கால்நடை வளர்ப்பவராக இருந்து, இதற்கு முன் இது மாதிரியான திட்டத்தில் பயன் பெயறாதவராக இருக்க வேண்டும். அரசின் விலையில்லா கால்நடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நாளை விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்</u>**

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர்க் கூட்டம், நாளை (நவ. 21ம் தேதி), காஞ்சிபுரம் ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில், நடைபெற உள்ளது. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர்க் கூட்டம், நாளை (21ம் தேதி) காலை 11:00 மணிக்கு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள, ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில், வேளாண்மை துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை விவசாயிகள் அளிக்கலாம்.

**<u>பூலாம்பட்டி கூட்டுறவு சங்கத்தில் யூரியா மூட்டைகள் வினியோகம்</u>**

இடைப்பாடி : இடைப்பாடி, பூலாம்பட்டி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் யூரியா உரம் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருவதாக, "காலைக்கதிர்' நாளிதழில் செய்தி வெளியானது. இதையடுத்து, பூலாம்பட்டியில் உள்ள கூட்டுறவு சங்கத்தில், விவசாயிகளின் தேவைக்கேற்ப யூரியா மூட்டைகள் வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில், வடகிழக்கு பருவ மழை, அனைத்து பகுதிகளிலும் நன்றாக பெய்தது. இதனால், விவசாயிகள், தங்களின் விளை நிலங்களில் நெற்பயிர்களை நட்டுள்ளனர். குறிப்பாக கூடக்கல், பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி, கல்வடங்கம், தேவூர் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் நெற்பயிர்கள் அதிகளவு நடப்பட்டு வருகிறது. இதற்காக அடிஉரம் அதிகளவில் தேவைப்படுகிறது. ஆனால், தேவைக்கு ஏற்ப யூரியா கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டது.சேலம் மாவட்டத்தில் உள்ள, தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு யூரியா வினியோகம் செய்யப்பட்டது. ஆனால், விவசாயிகள் அனைவருக்கும் யூரியா கிடைக்கவில்லை. தனியார் உரக்கடைகளில் யூரியா இருப்பு இல்லாததால், பயிர் நட முடியாமல் தவித்து வருகின்றனர்.பூலாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில், விவசாயிகளுக்கு யூரியா குறைவாக வழங்கப்பட்டது எனவும், அது விவசாயிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என "காலைக்கதிர்' நாளிதழில் செய்தி வெளியிடப் பட்டது.இதையடுத்து, நேற்று முன்தினம் பூலாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில், விவசாயிகளுக்கு யூரியா வழங்கப்பட்டது. விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப அவரவர்களின் விளை நிலங்களின் இருப்புக்கு ஏற்ப யூரியா வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என, இடைப்பாடி தாசில்தார் ஜெயராமன், துணை தாசில்தார் கோவிந்தராஜன் ஆகியோர் ஆய்வு செய்தனர். மூன்று நாட்களுக்கு முன், ஒரு விவசாயிக்கு ஒரு மூட்டை யூரியா வழங்கப் பட்டது. ஆனால் நேற்று முன்தினம், ஒரு விவசாயிக்கு இரண்டு மூட்டை முதல் நான்கு யூரியா மூட்டை வரை வழங்கப்பட்டதால், விவசாயிகளுக்கு தற்காலிகமாக யூரியா தேவை நிவர்த்தி செய்யப்பட்டது.

**<u>நீர்வடிப்பகுதி பசுமை திட்டத்தில் ரூ.56 லட்சத்தில் தரிசு நிலம் மேம்பாடு</u>**

துவரங்குறிச்சி: நீர்வடிப்பகுதி பசுமைத் திட்டத்தில், மருங்காபுரி ஒன்றியத்தில், 213 ஏக்கர் தரிசு நிலங்களை பசுமையாக்கும் பணிகள் நடந்து வருகிறது. இதனை, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குனர் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர். விதை முதல் விற்பனை வரை விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்து, கிராம பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், தமிழகத்தில் உள்ள நீர்வடிப்பகுதிகளில், 2.74 கோடி செலவில், "பசுமைத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சார்பில், மருங்காபுரி ஒன்றியத்துக்குட்பட்ட, லெக்க நாயக்கன்பட்டி, சீகம்பட்டி, உசிலம்பட்டி மற்றும் தெத்தூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல்வேறு விவசாயிகளின், 213.3 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, தலா, 50 ஏக்கர் நிலம் கொண்ட, நான்கு தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, அவற்றில், 56 லட்சம் செலவில் பசுமைத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், தரிசாக கிடந்த இந்த நிலங்கள் சமன்படுத்தி, வரப்புகள், பண்ணைக்குட்டைகள், 10 ஏக்கருக்கு ஒரு ஆழ் குழாய் கிணறு வீதம், 20 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து, மாமரக்கன்றுகள் முழுமையாக நடப்பட்டு பின்னர் நுண்ணீர்பாசன வசதியும் மேற்கொள்ளப்பட்ட உள்ளது. சீகம்பட்டியில் நடந்து வரும் இப்பணிகளை, திருச்சி மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குனர் லட்சுமணன், உதவி செயற்பொறியாளர் பிரசாத், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) பாண்டியராஜன், உதவி வேளாண் இயக்குனர் கண்ணன் ஆகியோர் ஆய்வு செய்தனர். அதில், சீகம்பட்டி நிலத் தொகுப்பில், 13 விவசாயிகளின், 51.63 ஏக்கர்

தரிசு நிலம் தேர்வு செய்யப்பட்டு சமப்படுத்தப்பட்டு, வரப்புகள் அமைத்து, பண்ணைக்குட்டைகள், ஆழ்குழாய் கிணறு அமைத்து, மாமரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை, இந்த தொகுப்பில் மட்டும், எட்டு ஏக்கரில் நடவுப்பணி நிறைவடைந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம், 100 ஆண்டுகளுக்கும் மேலாக தரிசாக கிடந்த நிலங்கள் விளைநிலமாக மாற்றப்பட்டுள்ளது. ""தரிசு நிலங்களை சீரமைத்து பசுமையாக்கும் திட்டத்தில் இதுவரை, 36 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம், 84 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இத்திட்டத்தில் முதன் முதலாக, மருங்காபுரி தாலுகாவில் உள்ள, 231.3 ஏக்கர் தரிசு நிலம் பசுமை நிலமாக மாற்றப்படுகிறது," என்று நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குனர் லட்சுமணன் தெரிவித்துள்ளார்.

**<u>மீன்வள ஆராய்ச்சி நிலையத்தில் வனாமி இறால் வளர்ப்புக்கு "ஊக்கம்'</u>**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், வனாமி இறால் வளர்க்க விரும்பும் டெல்டா பகுதி விவசாயிகளுக்கு, குறைந்த விலையில் இறால் குஞ்சுகள், தீவனம் மற்றும் இடுபொருட்கள் வழங்க மீன்வள ஆராய்ச்சி நிலையம் தயாராக உள்ளது. இது குறித்து, தஞ்சாவூர் மீன்வள விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் செந்தில்குமார் வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில், விவசாயி களிடையே வனாமி இறால் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கை கள், தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. இந்தியாவுக்கு அதிக அந்நிய செலாவணியை ஈட்டி தருவதில், இறால் ஏற்றுமதி முக்கிய பங்கு வகிக்கிறது. உவர் தன்மை அதிகம் உள்ள பகுதிகளில் மட்டுமே இறால் வளர்க்க முடியும், என்ற நிலை மாறி, உவர் தன்மை குறைந்த பகுதிகளிலும், வனாமி ரக இறால்களை வளர்க்கலாம். விவசாயத்துக்கு பயன்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ள உவர்

நிலங்கள் மற்றும் பண்ணை குட்டைகளில், இவ்வகையான இறால்களை வளர்க்கலாம். சிறு, குறு விவசாயிகள் தனியாகவும், கூட்டாகவும் வனாமி இறால் வளர்ப்பு தொழிலில் ஈடுபடலாம். வெளிநாடுகளில், வனாமி இறாலுக்கு வரவேற்பு உள்ளதால், அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம், அதிக வருமானம் கிடைக்க வழிவகை உள்ளது. வனாமி இறால் வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு, குறைந்த விலையில் தரமான இறால் குஞ்சுகள், தீவனம், இடுபொருட்கள் போன்றவை மீன்வள ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் வழங்கப்படும். விரும்புவோர், தஞ்சை அடுத்த சூரக்கோட்டையில் உள்ள மீன்வள விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை நேரிலோ அல்லது 04362-291625 என்ற டெலிஃபோன் எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவனப் பயிர் சாகுபடி தொழில்நுட்பம் வேளாண் அறிவியல் நிலையத்தில் பயிற்சி

ஆலங்குடி: ஆலங்குடி அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், தீவனப் பயிர் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தீவனப்பயிர் நடவு செய்து, செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் ஞானமலர் தலைமை வகித்து, கால்நடைகளுக்கேற்ற தீவனப்பயிர்களின் முக்கியத்துவத்தைப் பற்றி துவக்க உரையாற்றினார். உதவிப்பேராசிரியர் மாரிமுத்து, தீவனப்பயிர் சாகுபடி பற்றி பேசியதாவது; தமிழகத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 2.5 கோடி எனவும், இவற்றுக்கு, 100 மில்லியன் டன்கள் பசுந்தீவனத் தேவை உள்ளது. தமிழகத்தில், 70 முதல், 80 சதவீதம் பசுந்தீவன பற்றாக்குறை உள்ளது. இத்தருணத்தில், தீவனப்பயிர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட்டால் தான், பால் உற்பத்தி அதிகரிப்பதோடு மட்டுமின்றி, தீவன செலவையும்

குறைக்க முடியும். தீவனப் பற்றாக்குறையை சமாளிக்க வழிமுறைகளான புதிய உயர் விளைச்சல் ரகங்களை தேர்வு செய்து பயிரிடுதல், தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், சாலையோர நிலங்கள், ஏரிக்கரை, வாய்கால் கரை, ஆற்றுப்படுகை போன்ற இடங்களில் நிலத்தின் தன்மைக்கேற்ப தீவனப்பயிர்கள் வளர்த்தல், ஒருங்கிணைந்த பயிர் உற்பத்தி முறைகளை கையாளுதல், கொழுக்கட்டை புல் மூன்று வரிசையிலும், வேலி மசால் ஒரு வரிசையில் என்ற விகிதத்தில், ஒரு எக்டர் நிலத்தில் பயிரிடுவதன் மூலம், 20 செம்மறி ஆடுகளையும், 23 வெள்ளாடுகளையும் பராமரிக்கலாம். தென்னை, மா, கொய்யா, எழுமிச்சை, போன்ற மரப்பயிர்களும் தீவனப்யிர்களான கம்புநேப்பியர் புல் கோ 4, கினியாபுல், வேலிமசால், தீவனத்தட்டைபயிர் கோ 8, தீவனசோளம் கோ.எஃப்.எஸ்29 ஆகிய தீவனப்யிர்களை ஊடுபயிர் செய்யலாம். ஒரு எக்டரில், கம்புநேப்பியர்புல் கோ4 மற்றும் தட்டைப்பயிர் ஆகியவற்றை பயிரிடுவதன் மூலம், 25 கறவை மாடுகள் அல்லது எருமை மாடுகளை பராமரிக்கலாம். ஒரு நாளைக்கு, ஏழு லிட்டர் வரை பால் கறக்கும் மாடுகளுக்கு பசுந்தீவனமாக, 25 முதல், 35 கிலோ வரை இடுவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்கலாம். மேலும், கம்புநேப்பியர் புல், கினியா புல், கொழுகட்டைப்புல், வேலிமசால், குதிரைமசால் ஆகிய தீவனப்பயிர்கள் மற்றும் தீவன மரங்களான சுபாபுல் மற்றும் அகத்தி ஆகியவற்றைப் பற்றிய சாகுபடி தொழில்நுட்பங்களைப் பற்றி உதவிப் பேராசிரியர் விளக்கி கூறினார். பயிற்சியில், புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட கம்புநேப்பயிர் புல் கோ 4 தீவனப்பயிர், சொட்டுநீர் பாசன முறையில் நடவு செய்யும் முறை குறித்து அவர் கூறியதாவது; புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட, கம்புநேப்பயிர் ரகம் கோ4 பல்லாண்டு பயிர். இதன் தண்டு சிறுத்தும் ஒரு செடியில், 350 - 400 எண்ணிக்கை உள்ள இலைகளும், 30 - 40 எண்ணிக்கை உடைய கிளைகளும் உற்பத்தி செய்யும். இதனை ஏக்கருக்கு, 16,000 கரணைகள்

நடவு செய்ய தேவைப்படுகிறது. இதனை வரிசைக்கு வரிசை, 50 செ.மீ மற்றும் செடிக்கு செடி, 50 செ.மீ இடைவெளியில் நடவு செய்தால், ஏக்கருக்கு ஒரு ஆண்டுக்கு, 140 முதல், 160 டன் வரை மகசூல் பெறலாம். மேலும், ஒரு ஏக்கரில் கரணை உற்பத்தி செய்தால், 4 லட்சத்து, 60 ஆயிரம் வரை லாபம் ஈட்டலாம், என்றார். பயிற்சியில் வேளாண்மை நிலைய விஞ்ஞானிகள் மற்றும் புதுகை மாவட்டத்தில் உள்ள பல்வேறு விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மழையால் புத்துயிர் பெற்ற தென்னைகள்

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில் வறட்சியால் காய்ந்த தென்னை மரங்கள் மழையால் மீண்டும் தழைத்து வருகின்றன. கம்பம், சின்னமனூர், போடிக்கு அடுத்தபடியாக பெரியகுளம் தாலுகாவில் அதிகளவில் தென்னை சாகுபடி நடக்கிறது. குறிப்பாக மஞ்சளாறு, ஜி.கல்லுப்பட்டி, கெங்குவார்பட்டி, தேவதானப்பட்டி, ஜெயமங்கலம், குள்ளப்புரம், லட்சுமிபுரம், கீழவடகரை, பெரியகுளம், மேல்மங்கலம், வடுகபட்டி உட்பட பல்வேறு கிராமங்களில் 7000 ஏக்கரில் தென்னை சாகுபடி நடந்து வந்தது. கடந்த காலங்களில் ஏற்பட்ட வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்தன. அவற்றை விவசாயிகள் வெட்டி அகற்றினர். தேனி மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த தென்னை மரங்கள் குறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் சர்வே செய்த போது மாவட்டத்தில் பாதித்த மொத்த தென்னை மரங்களில் 70 சதவீதம் மரங்கள் பெரியகுளம் தாலுகாவில் பாதிக்கப்பட்டது தெரிய வந்தது. குறிப்பாக ஜி.கல்லுப்பட்டி, கெங்குவார்பட்டி கிராமங்களில் அதிகமாக பாதிக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்தது. இதனால் ஆறு, ஓடைகளில் நீர்வரத்து ஏற்பட்டது. தற்போது விவசாயப்பணிகள் முழுவீச்சில் நடக்கிறது. மீண்டும் தழைக்கும் தென்னை: காய்ந்து போன மரங்கள் போக உயிர் ஊசலாடிக்

கொண்டிருந்த தென்னை மரங்கள் தற்போது மீண்டும் தழைத்து வருகின்றன. இவ்வாறான தென்னை மரங்களை பராமரிப்பு செய்து மீண்டும் காய்ப்புக்கு கொண்டு வருவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். காய்ந்து மீண்டும் உயிர்பிடித்துள்ள தென்னை மரங்களை பராமரிப்பு செய்தால் மீண்டும் பலன் கிடைக்குமா என்று தோட்டக் கலைத்துறை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது," காய்ந்து வரும் தென்னை மரங்களை பராமரிப்பு செய்து, நாள் ஒன்றுக்கு ஒரு மரத்திற்கு குறைந்தது 50 லிட்டர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.கூடுதலான தண்ணீர் மற்றும் உரங்கள் தேவைப்படும். இவ்வாறு தொடர்ந்து பராமரித்தால் ஓராண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு பலன் கிடைக்கும், என்றார்.

## <u>மணலூர் கண்மாய் தண்ணீர் தேங்கியது; விவசாயிகள் மகிழ்ச்சி</u>

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர் அருகே மணலூர் கண்மாயில், விவசாயத்திற்கு போதிய மழைநீர் தேங்கியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பரளையாற்றிலிருந்து வரும் உபரிநீரை, வரத்துகால்வாய் வழியாக மணலூர் கண்மாய்க்கு செல்லும் வகையில் சீரமைக்கப்பட்டது. இதனால் சமீபத்தில் பெய்த மழையிலும், பெருகிய மழைநீர் வரத்து கால்வாய்கள் வழியாக, மணலூர் கண்மாயில் விவசாயத்திற்கு போதுமான அளவில் தேங்கியுள்ளது. இந்தாண்டு விவசாயம் செழித்து, அதிக மகசூல் கிடைக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். இப்பகுதியில் மணலூர் கண்மாய் மட்டுமே நிரம்பியுள்ளது. இதுகுறித்து மணலூர் ஊராட்சி தலைவர் நாகஜோதிராமர் கூறுகையில், "மழைநீரை வீணாக்காமல், கண்மாய்களில் தேக்கிவிட வேண்டும் என்பதற்காக, மழை சீசனுக்கு முன்பாகவே, வரத்து கால்வாய் மராமத்து செய்யபட்டது. இதனால், மழைநீர் வரத்து அதிகரித்து,போதுமான அளவிற்கு கண்மாயில் தேங்கி

உள்ளது. வரத்து கால்வாய் மராமத்து செய்ய உத்தரவிட்ட கலெக்டருக்கு, கிராம மக்கள் சார்பில் பாராட்டு விழா நடத்த உள்ளோம்," என்றார்.

## விவசாயிகள் கோரிக்கை

ஆர்.எஸ்.மங்கலம் : கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு இழப்பீடு பெற, தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகள் விண்ணப்பிப்பதற்கு, நவ.,15 கடைசி நாள் என அறிவிக்கப்பட்டது. வி.ஏ.ஓ.,க்கள் பற்றாக்குறை இருப்பதாலும், அடங்கல் வழங்க கால தாமதம்ஏற்படுவதாலும், தேவிபட்டினம் மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளில் 60 சதவீதத்திற்கும் மேலான விவசாயிகள் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெற முடியாத நிலை உள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் பயிர்காப்பீட்டுக்கு பதிவு செய்யும் காலத்தை நீட்டிக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தொடக்க கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு ரூ.27 கோடி பயிர் கடன்; இணைப்பதிவாளர் தகவல்

சிவகங்கை : மாவட்டத்தில் 4,617 விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் 2014 அக்.,வரை பயிர்கடனாக ரூ.26.75 கோடி வரை வழங்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுதுறை இணைபதிவாளர் பிரபு தெரிவித்தார். அவர் கூறியதாவது: விவசாயிகள் விளைவித்த உணவு பொருட்களை பாதுகாக்க ஊரக குடோன் கட்டுவதற்கு நபார்டு வங்கியில் இருந்து தமிழக அரசு ரூ.18.85 கோடி கடன் பெற்று, 166 குடோன்கள் கட்ட கூட்டுறவு துறைக்கு முற்றிலும் மானியமாக வழங்கியுள்ளது. வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நகைக்கடன் வழங்க ரூ.3 கோடி ஒதுக்கியுள்ளோம். வங்கிகளின் பாதுகாப்பிற்கென அனைத்து வங்கிகளிலும் "சிசிடிவி', கேமரா பொருத்தும் பணி நடக்கிறது. விவசாய பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க நடப்பாண்டு அக்.,வரை 4,617 விவசாயிகளுக்கு ரூ.26.75 கோடி வரை பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.

விவசாய பணிகளுக்காக கூட்டுறவு வங்கிகளில் ரூ.1.28 கோடியில் உழவு இயந்திரம், பவர் டிரில்லர், மினி டிராக்டர் குறைந்த வாடகைக்கு விடப்படுகிறது. அக்., வரை 538 மகளிர்களுக்கு ரூ.1.49 கோடி தொழில் முனைவோர் கடனும், பணிபுரியும் மகளிருக்கு 55.28 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. சிறுவணிக கடனாக 1,728 பேர்களுக்கு ரூ.1.70 கோடியும் வழங்கியுள்ளோம், என்றார்.

## ரூ.100க்கு கத்தரிக்காய்

விருதுநகர் : விருதுநகர் காய்கறி மார்க்கெட்டில் நாட்டு கத்தரிக்காய் வரத்து குறைந்ததால் கிலோ ரூ. 100 க்கு விற்கப்படுகிறது. கார்த்திகை பிறந்ததால் ஐயப்பன், முருகன், குல தெய்வ கோயில்களுக்கு பலர் மாலை அணிந்து விரதம் தொடங்குவர். இதன் காரணமாக உணவில் காய்கறிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்நிலையில் வரத்து குறைவு, பருவ காலம் இல்லாததால் காய்கள் விலை எகிறியுள்ளது. கிலோவில் கடந்த வாரம் விற்பனை செய்யப்பட்ட நாட்டு கத்தரிக்காய் ரூ. 50 லிருந்து ரூ. 100 க்கு உயர்ந்துள்ளது. மல்லி தழை ரூ. 80, சின்ன வெங்காயம் ரூ. 50 க்கு விற்கப் படுகிறது. விபாயாரி காளீஸ்வரன் கூறுகையில், ""தொடர் மழை காரணமாக வெங்காயம் அழுகியதால் ரூ. 50 க்கு விற்கப் படுகிறது. சாத்தூர், கொள்ளபட்டியிலிருந்து நாட்டுக்கத்தரிக்காய் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும். தற்போது தான் கத்தரி செடி நடும் காலம் என்பதால் வரத்து இல்லை. ஒரு சில விவசாயிகள் நடவு செய்த கோடை கத்தரிக்காய் மட்டுமே வரத்து உள்ளதால், நாட்டுகத்திரிக்காய் கிலோ ரூ. 100 க்கு விற்கப்படுகிறது, " என்றார்.

## பேச்சிப்பாறையில் கூடுதல் தண்ணீர் திறப்பு

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையினால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டம்

கணிசமாக உயர்ந்தது. கடந்த 2 நாட்களாக அணையோர பகுதிகளில் அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது. பேச்சிப்பாறை அணையில் இருந்து பாசனத்திற்காக கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 45 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 364 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 481 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 69.20 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 216 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 250 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வனவிலங்குகளை விரட்ட விவசாயிகள் புது டெக்னிக்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவு விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த தொடர் மழையால், மானாவாரியாக உளுந்து பயிரிரை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். எலவனாசூர்கோட்டை, புத்தமங்கலம், நெடுமானூர், பரிந்தல் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவு மானாவாரியாக உளுந்து பயிரை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். கிராமத்தில் உள்ள விவசாய நிலத்துக்கு அருகில் வனத்துறைக்கு சொந்தமான காப்புக்காடுகள் உள்ளது. இங்கு அதிக அளவில் மான்கள் மற்றும் காட்டுப்பன்றிகள் உள்ளது. வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை இரவு நேரங்களில் வனவிலங்குகள் தின்று

சேதப்படுத்தி வருகிறது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் பகல் நேரங்களில் தங்களது வயல்களில் தங்கி பயிர்களை பாதுகாத்து வருகின்றனர். இரவு நேரங்களில் பயிர்களை பாதுகாக்க பனை ஓலை மட்டைகளை வயல்களில் நட்டு வைத்துள்ளனர். இரவு நேரங்களில் காற்று வீசும் போது பனை ஓலை மட்டைகள் காற்றில் ஆடும் போது, ஏற்படும் சத்தம் கேட்டு வன விலங்குகள் ஓடி விடும். இதனை பின்பற்றி புத்தகமங்கலம் கிராம மக்கள் பனை ஓலைகளை நட்டு வைத்துள்ளனர். இந்த முறையினை அருகில் உள்ள கிராமத்தை சேர்ந்த விவசாயிகளும் தற்போது நடைமுறை படுத்தி வருகின்றனர். இருந்தாலும் இரவு நேரங்களில் மான், காட்டுப்பன்றி உள்ளிட்ட வன விலங்குகள் பயிர்களை தின்று சேதப்படுத்தி வருவதை தடுக்க முடியவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இவ்விஷயத்தில் வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டு மென எதிர்பார்க்கின்றனர்.

## திருச்சி மாவட்டத்தில் 111.14 மி.மீ. மழை பதிவு

திருச்சி, திருச்சி யில் நேற்று காலை வரை 111.14 மி.மீ மழை பதிவா னது. திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்யவில்லை இந்நிலையில் நேற்று முன் தினம் மாலையில் சில இடங்களில் திடீரென மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 111.14 மி.மீ மழை பதிவா னது. இதில் அதிகபட்ச மாக பொன்னணியாறு டேமில் 18.60 மி.மீ மழை யும், குறைந்தபட்சமாக துறையூரில் 1 மி.மீ மழையும் பதிவானது. சராசரியாக 4.45 மி.மீ மழை பெய்துள் ளது. மாவட்டத்தில் ஒரு சில இடங்களான புலிவலம், கொப்பம்பட்டி, தென்பர நாடு, பொன்மலை, திருச்சி டவுன், திருச்சி ஜங்ஷன் ஆகிய பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு (மி. மீட்டரில்): லால்குடி 6, மணப் பாறை 13.60, முசிறி 5, புள்ளம்பாடி 5.20, தா. பேட்டை 4.50, மருங் கா புரி 12.60, நவலூர் கொட்டப் பட்டு 1.30, நந்தியார் தலைப்பு 5, கள்ளக்குடி

10, வாத்தலை அணைக் கட்டு 7, சமயபுரம் 7, தேவி மங்கலம் 3, சிறுகுடி 2, கோவில்பட்டி 4.20, துவாக்குடி 5.

**<u>தரமான விதை கிடைக்க பரிசோதனை நிலையத்தில் பாரபட்சமற்ற பகுப்பாய்வு அலுவலர்களுக்கு அறிவுரை</u>**

திருச்சி, தரமான விதை கள் விவசாயிகளுக்கு கிடைக்க விதை பரிசோதனை நிலையத் தின் பகுப்பாய்வு முறைகள் பாரபட்சமின்றி இருக்க வேண்டுமென துறை அலுவலர்களுக்கு விதைச்சான்று இயக்குனர் அறிவுரை வழங்கினார். திருச்சி விதை பரிசோதனை நிலையத்தில் கோவை விதைச்சான்று இயக்குனர் ராதாகிருஷ் ணன் நேற்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் அக்டோபர் 2014 வரை 7,360 விதை மாதிரிகள் பகுப்பாய்வு இலக்குக்கு 8,202 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு 110 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது. பகுப்பாய்வு செய்யப்பட்ட விதை மாதிரிகளின் முடிவுகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகிறது. திருச்சி விதை பரிசோதனை அலுவலர் கட்டுப்பாட்டில் உள்ள விழுப்புரம், பெரம்பலூர், கரூர் மற்றும் புதுகை ஆகிய விதை பரிசோதனை நிலையங்களின் விதைமாதிரிகள் இலக்கு மற்றும் சாதனை குறித்த விவரங்களை திருச்சி விதை பரிசோதனை அலு வலர் ரவி விரிவாக எடுத்து கூறி னார். இதைதொடர்ந்து விதை பரி சோதனை நிலையத்தில் உள்ள முளைப்புதிறன் அறையை விதைச்சான்று இயக்குனர் ராதாகிருஷ்ணன் ஆய்வு செய்தார். அப் போது தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்க விதை பரி சோதனை நிலையத்தின் பகுப்பாய்வு முறைகள் பாரபட்ச மின்றி இருக்க வேண்டுமென துறை அலுவலர்களை அறிவுறுத்தினார். ஆய்வின்போது திருச்சி மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் எழில் அரசு, விதை ஆய்வு துணை இயக்குனர் முத்துக்கூரி, விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர்கள் மனோன்மணி, ஜெயராணி உடனிருந்தனர். பின்னர் விதைச்சான்று இயக்குனர் ராதாகிருஷ்ணன் கூறுகை யில், தரமான விதைகளை விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டுமானால் விதை மாதிரிகளை விதை பரிசோதனை நிலையத்தில் அனுப்பி அதன்

முளைப்புதிறன், பிறரக கலப்பு மற்றும் ஈரப்பதம் போன்றவை நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவு உள்ளதா என்று சரிபார்த்து விதைப்பு செய்ய வேண்டும். மேலும் விவசாயிகள் மட்டுமல்லாது தனியார் விதை உற்பத்தியாளர், விதை விற்பனையாளர் அனைவரும் விற்பனைக்காக தங்களிடம் உள்ள விதை மாதிரிகளை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்பி பகுப்பாய்வு செய்து பரிசோதனை முடி வின் அடிப்படையில் தரமான விதைகளை விநியோகம் செய்ய வேண்டும். ஒரு விதை மாதிரிக் கான பகுப்பாய்வு கட்டணம் ரூ.30 செலுத்தி னால் போதும். விதை பரிசோதனை அலுவலர், விதை பரி சோதனை நிலையம், காஜா மலை, திருச்சி என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை நிலையத்துக்கு அனுப்ப வேண் டும். உயர் விளைச்சலுக்கு உத்தரவாதம் அளிப்பது தர மான விதை என்பதால் விவசாயிகள், விதை விற்பனை யாளர்கள், விதை உற்பத்தியாளர்கள் அனை வரும் விதை பரிசோதனை நிலையத்தை பயன்படுத்தி விதைகளை விநியோகிக்க வேண்டும் என்றார்.

## வேளாண் துறை மாணவர்களுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி

செம்பட்டி, சின்னாளபட்டியில் காந்தி கிராமம் பல்கலைக்கழக வேளாண் துறை மாணவர்களுக்கு திருந்திய சாகுபடி முறையில் நெல் நடவு செய்யும் பயிற்சியை வேளாண் துறையினர் அளித்தனர். ஆத்தூர் வட்டார வேளாண் துறையினர் ஆத் தூர், செம்பட்டி, சித்தையன்கோட்டை, வக்கம் பட்டி, சேடபட்டி, சித்த ரேவு, செட்டியபட்டி, காந்திகிராமம் உள்ளிட்ட பல கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி நடவு செய்ய பயிற்சி அளித்து வருகின்றனர். சின்னாளபட்டியில் சக்கரபாணி என்பவரின் 4 ஏக்கர் வயலில் காந்திகிரா மம் பல்கலை கழகத்தில் இரண்டாம் ஆண்டு, மூன் றாம் ஆண்டு பயிலும் வேளாண் மாணவ, மாணவியருக்கு திருந்திய சாகுபடி முறையில் நெல் நடவு செய்ய பயிற்சி அளிக்கப்பட்டது. முன்னதாக வயலில் நடவு செய்ய 14 நாட்கள் ஆன நெல் நாற்றுகளை மாணவ, மாணவியர் தொழிலாளர்களுடன் இணைந்து பறித்தனர். பின்பு

அவற்றை வயல்களில் நடவு செய்தனர். இது குறித்து வேளாண் மாணவர்கள் கூறுகையில், “நெற் பயிர் ஒன்றுதான் தண்ணீர் தேங்கிய நிலையில் நடவு செய்யும் பயிர். எங்களுக்கு இந்த பயிர் நடவு செய்வது குறித்த அனுபவம் புதுமையாக இருந்தது, என்றனர். பயிற்சியின்போது ஆத்தூர் வட்டார உதவி இயக்குநர் முருகேசன், துணை வட்டார வேளாண் அலுவலர் மோகன், காந்திகிராம பல்கலைக்கழக வேளாண் துறை பேராசிரியர்கள் செந்தில்வேல், ரெங்கநாதன், உதவி வேளாண் அலுவலர் பாண்டீஸ்வரி, அட்மா திட்ட அலுவலர்கள் ராதாகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். ஆத்தூர் வட்டார துணை வேளாண் அலுவ லர் மோகன் கூறுகையில் “ஆத்தூர் பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாக இப்பகுதி விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்து வருகின்றனர். இதனால் அவர்களுக்கு அதிகப்படியான மகசூல் கிடைக்கிறது. சராசரியாக ஓர் ஏக்கருக்கு சாதாரண முறைப்படி நெல் பயிரிட்டால் இரண்டு டன் மகசூல் கிடைக்கும். ஆனால், திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிட்டால் 3 டன் முதல் 3.5 டன் வரை மகசூல் கிடைக்கும், என்றார்.

## <u>ஓட்டன்சத்திரம் பகுதியில் கண்வலிசெடி விவசாயம் அமோகம் பூக்களுக்கு ஒட்டுகட்டும் பணி தீவிரம்</u>

ஒட்டன்சத்திரம், ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுபுற மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக கொண்டுள்ளனர். சில நேரங்களில் விவசாய பொருட்களுக்கு போதிய விலை கிடைக்காததால், நஷ்டம் அடைகின்றனர். இதனால் பல விவசாயிகள் மாற்றுப்பயிர் சாகுபடிக்கு மாறி வருகின்றனர். பெரும்பாலான விவசாயிகள் தற்போது மருத்துவ குணமுடைய செங்காந்த மலர் எனப்படும் கண்வலிச்செடி பயிரிடுகின்றனர். இது ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளான கள்ளிமந்தயம், கப்பல்பட்டி, சின்னமண்டவாடி,சின்னைய கவுண்டன் வலசு, தேவச் சின்னாம் பட்டி, தொப்பம்பட்டி,சின்னக்காம்பட்டி

உள்ளிட்ட பல பகுதிகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்யப்படுகிறது. தற்போது இப்பகுதிகளில் ஓரளவு மழை பெய்துள்ளதால் பூக்கள் நன்கு பூத்து பிஞ்சுகள் உருவாகி வருகிறது. இந்த நிலையில் முக்கிய பணியான ஒட்டுகட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இந்த விதைகள் ஒரு ஏக்கருக்கு 300 முதல் 350 கிலோ வரை உற்பத்தியாகிறது. கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ. 800க்கு வியாபாரிகள் வாங்கினர்.கண்வலி விதைகள் இத்தாலி, ஜெர்மன், அமெரிக்கா, இங்கிலாந்து,சுவிட்சர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது. கண்வலி விதை களை இடைத்தரகர்கள் இல்லாமல் விற்பனை செய்ய ஒட்டன்சத்திரம் பகுதியில் அரசே நேரடியாக கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு இயந்திரங்கள் மூலம் மட்டுமே நடைபெறும் விவசாயபணி

பழநி, : ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு காரணமாக இயந்திரங்கள் மூலம் மட்டுமே விவசாயப்பணிகள் நடந்து வருகின்றன. பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாக கொண்டவை. இங்குள்ள மக்கள் அணை களை நம்பியும், அணை களில் இருந்து நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களை நம்பியுமே விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக கைவிட்ட பருவமழை இந்த வருடம் ஓரளவு பெய்ததால் பழநி பகுதியில் விவசாயப்பணிகள் துவங்கி உள்ளன. பழநி அருகே பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி, ஆயக்குடி, பாப்பம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் முதற்கட்டமாக நெற்பயிர் நடவுப்பணி துவங்கி உள் ளன. ஆனால் கூலி உயர்வு, ஆட்கள் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் இப்பணிக்கு மனித சக்திகளை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் இயந்திரங்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதுகுறித்து

பழநி அருகே பாலசமுத்திரத்தை சேர்ந்த விவசாயி ராமசாமி கூறியதாவது: கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்புவரை வேலையாட்கள் தேவையான அளவு கிடைத்து வந்தனர். அதன் பிறகு தொடர்ந்து வந்த வறட்சி காரணமாக விவசாய பணிகள் சரியாக நடைபெறவில்லை. எனவே வாழ்வாதாரம் தேடி 100 நாள் வேலை திட்டத்திற்கு தொழிலாளர்கள் செல்லத் துவங்கிவிட்டனர். இதனால் விவசாயத்தின் மேல் தொழிலாளர்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். மேலும் தற்போது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலியும் கடுமையாக உயர்ந்து விட்டது. கூலி முறை ஒழிந்து 1 குழி (60 சென்ட்) நிலத்தில் நடவுப்பணி மேற்கொள்ள ஒப்பந்த முறையில் ரூ.1020 கொடுக்க வேண்டி உள்ளது. ஆனால் இயந்திரங்கள் மூலம் நடவுப்பணி மேற்கொண்டாலும் இதே தொகை தான் செலவாகிறது. இயந்திர நடவில் நேரமும் அதிகளவு மிச்சமடைகிறது. இதனால் தற்போது இயந்திர முறை நடவையே பெரும்பாலானோர் மேற்கொள்கின்றனர். தற்போது விவசாயக் கூலியாக வருபவர்கள் பெரும்பாலானோர் 55 வயதைக் கடந்தவர்கள், இளையவர் கள் ஆர்வம் காட்டுவதில்லை. இதே நிலை நீடித்தால் இன்னும் 15 ஆண்டுகளுக்குப் பின் விவசாயப்பணி மேற் கொள்ள ஆளே இல்லாத நிலைமை தமிழகத்தில் நிலவும். இவ்வாறு அவர் வேதனையுடன் தெரிவித்தார்.

## நவ. 21ல் விவசாயிகள் குறை தீர் கூட்டம்

சிவகங்கை,: விவசாயிகள் குறை தீர் கூட்டம் நவ.21ம் தேதி காலை 11மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள் பங்கேற்கின்றனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

## விவசாயத்துக்கு தேவையான யூரியா இருப்பு உள்ளது கலெக்டர் தகவல்

காஞ்சிபுரம்,: காஞ்சிபுரம் கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயத்துக்கு தேவையான யூரியா உரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை காரணமாக விவசாயிகளுக்கு தேவையான யூரியா கிடைப்பதற்காக வேளாண்மை துறை அமைச்சர் தலைமையில் ஆய்வுகூட்டம் நடத்தப்பட்டது. மாவட்டத்தில் அனைத்து உர தயாரிப்பாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு தேவையான யூரியா வழங்குவதை ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தழைச்சத்து அளிக்கக்கூடிய யூரியாவை நெற்பயிருக்கு இரண்டு, மூன்று முறை பிரித்து போடவேண்டும். எனவே, அதிக மகசூல் கிடைக்க போதுமான யூரியா போடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## புதுகையில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

புதுக்கோட்டை, : புதுக் கோட்டையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை நடக்கிறது. புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை (21ம் தேதி) காலை 10 மணியளவில் மாவட்ட கலெக்டர் கணேஷ் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம் சம்மந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளார்கள். எனவே புதுக் கோட்டை மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயம் தொடாபுடைய கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தக வலை கலெக்டர் கணேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## சம்பா பருவத்தில் நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் என்ன? வேளாண் அதிகாரி விளக்கம்

அறந்தாங்கி,: நடப்பு சம்பா பருவத்தில் நெல் பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் முறை குறித்து ஆவுடையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் அடைக்கப்பன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி யிருப்பதாவது ஆவுடையார்கோவில் வட்டார விவசாய பகுதியில் தற்பொழுது சம்பா நெல் சாகுபடி பணிகள் நடைபெற்று வருகிறது. நெல் பயிர்களை தாக்கும் பூச்சிகளில் குருத்துப்பூச்சி முக்கியமானது. இப்பூச்சி தண்டு துளைப்பான் எனவும் அழைக்கப்படுகிறது. பெரும்பாலான இடங்களில் இப்பூச்சியின் சேதம் நாற்றங்காலிலேயே துவங்குகிறது. இப்பூச்சி நடவு செய்த இளம் பயிரிலும், கதிர் பிடிக்கும் பருவத்திலும் சேதங்களை உண்டாக்குகிறது. அந்து பூச்சிகள் இலைகளின் மேற்பகுதியில் முட்டைகளை குவியலாக இடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளையிட்டு உள்ளே சென்று அதன் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு உட்பகுதியை கடித்து உண்பதால் இளம் பயிரின் நடுக்குறுத்து வாடி காய்ந்து காணப்படும். இவ்வாறு தாக்கப்பட்ட பயிர் வளர்ச்சி குன்றி விடும். தூர்களின் எண்ணிக்கையும் குறைந்து காணப்படும். மேலும் புழுவானது கதிர் பிடிக்கும் தருணத்தில் தாக்கும் போது வெளிவரும் கதிரில் நெல் மணிகளை பால் பிடிக்காமல் சாவியாகிவிடும். வெண்கதிர்களாகவும் மாறிவிடும். இதனால் மகசூல் வெகுவாக குறைந்து விடும். இப்புழுக்கள் பயிர்கள் தூர் கட்டும் பருவத்தில் நடுக்குருத்து வாடல் மற்றும் கதிர் வரும் தருணத்தில் வெண்கதிர் போன்ற சேத அறிகுறிகளை ஏற்படுத்துகிறது. இப்புழு தண்ணீரில் நீந்தி ஒரு தூரில் இருந்து மற்றொரு தூருக்கு செல்லும் தன்மை கொணடது. பெண் அந்து பூச்சிகள் இலை நுனிக்கு கீழே முட்டைகளை குவியலாக இடும். ஒரு குவியலுக்கு 50 முதல் 200 முட்டைகள் வரை இருக்கும். இவற்றிலிருந்து ஒரு வார காலத்தில்

மிகச்சிறிய புழுக்கள் வெளிவரும். இப்புழுக்கள் வெளிவந்த ஒரு மணிநேரத்திற்குள் கீழ் நோக்கி நகர்ந்து தூர்களில் துவாரம் ஏற்படுத்தி தண்டுக்குள் சென்று தண்டின் அடிப்பாகத்தை சென்றடைந்து சேதத்தை ஏற்ப்படுத்துகின்றன. பின்பு அவை கூட்டுப்புழுவாக மாறி அதிலிருந்து அந்து பூச்சிகள் வெளிவருகின்றன. இதனை கட்டுப்படுத்த அறுவடை செய்த பின் தாள்களை மடக்கி உழுவதன் மூலம் புழுக்களையும், கூட்டுப்புழுக்கலாம் அழிக்கலாம். நடவு செய்யும் போது வாடிய நடுக்குருத்துடைய நாற்றுக்களை தவிர்க்க வேண்டும். நடுவதற்கு முன் நாற்றுகளின் நுனியை கிள்ளி முட்டை குவியல்களை அழிக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவிற்கு மேல் தழைச்சத்து உரங்கள் இடுவது கூடாது. இரவு நேரங்களில் மாலை 6 முதல் 9 மணிவரை விளக்கு பொறிகள் வைத்து அந்து பூச்சிகளை சேகரித்து அழிக்கலாம். விளக்கு பொறியின் அடியில் ஒரு தட்டில் மண்ணெண்னை கலந்து நீர் வைத்தால் வெளிச்சத்திற்கு கவரப்பட்டு அந்து பூச்சிகள் நீரின் மேல் விழுந்து அழிகின்றன. ஏக்கருக்கு ஒரு விளக்கு பொறி போதுமானது. மேலும் ஒரு எக்டேருக்கு பிப்ரோனில் 5 எஸ்.சி 750 மில்லி லிட்டரில் இருந்து 1000 மில்லி லிட்டர் அல்லது கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 4 சதவிதம் ஜி-20 கிலோ கிராம் அல்லது கார்போபியூரான் 3 சதவிம் சிஜி-35 கிலோ கிராம் அல்லது லாம்டா சைஹாலோத்திரின் 5 இசி-250 மில்லி லிட்டர் அல்லது குளோரி பைரிபாஸ் 20 இசி-1250 மில்லி லிட்டர் போன்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை பயிர்களில் தெளித்து குருத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். மேலும் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 50 சதவித மானியத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் பெற தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அணுகி மானிய விண்ணப்பம் பெற்று பயன்படுத்தி கொள்ளலாம் எனக் கேடடுக்கொண்டுள்ளார்.

## வம்பன் அறிவியல் மையத்தில் சம்பா பருவத்தில் நோய் மேலாண்மை பயிற்சி

ஆலங்குடி, : ஆலங்குடியை அடுத்த வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் சம்பா நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த நோய் மேலா ண்மை குறித்த ஒருநாள் பயிற்சி இன்று நடக்கிறது. இது பற்றி வம்பன் அறிவியல் நிலையப் பேராசிரியர் ஞானமலர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: நெற்பயிரைத் தாக்கும் நோய்களான பூஞ்சாண நோய்கள் பாக்டீரியா நோய்கள் மற்றும் நச்சுயிரி நோய்களின் தீவிரம், சாகுபடி செய்யப்படும் நெல் ரகம், பருவம், நிலவும் தட்ப வெப்பநிலை மற்றும் பயிர் நிர்வாகம் ஆகியவற்றை பொறுத்தே நெல் பயிர் பாதிப்பிற்கு உள்ளாகி மகசூல் குறைகின்றது. ஆகையால் இன்று வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒருநாள் இலவசப் பயிற்சியாக சம்பா பருவ நெல்லில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள் பற்றி காலை 10 மணிக்கு விஞ்ஞானிகள் விரிவாக எடுத்துரைக்க உள்ளனர். எனவே ஆர்வமுள்ள விவசாயிகள், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள் தங்கள் வயலில் தோன்றும் நோய் பாதிக்கப்பட்ட நெல் செடி மாதிரிகளை கொண்டு வந்து அதற்கு ஏற்ற மேலாண்மை தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

## குமரியில் சாரல் மழை நீடிப்பு

நாகர்கோவில், : குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. நேற்றும் காலை முதல் இரவு வரை தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஒரு சில இடங்களில் மட்டும் சாரல் மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறையில் 2.8, சிற்றார்-1ல் 3.6, சிற்றார்-2ல் 2.2, மயிலாடியில் 1.2, கொட்டாரத்தில் 1.8 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 45 அடியாக இருந்தது. அணைக்கு 364 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்த நிலையில் அணையில் இருந்து 481 கன அடி தண்ணீர் திறக்கப்

பட்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 69.20 அடியாக இருந்தது. அணைக்கு 216 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்த நிலையில் 250 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. சிற்றார்-1 நீர்மட்டம் 15.61 அடியாக உள்ளது. அணைக்கு 170 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. 200 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. சிற்றார்-2ல் 15.71 அடி நீர்மட்டம் காணப்பட்டது. பொய்கையில் 9.80 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது.

## மேல்புறம் ஒன்றிய தென்னை உற்பத்தியாளர் சங்க கூட்டம்

மார்த்தாண்டம், : மேல் புறம் ஒன்றிய தென்னை உற்பத்தியாளர்கள் சங்க பேரவை கூட்டம் இடைக்கோட்டில் நடந்தது. கூட்டத்திற்கு சங்க தலைவர் சுகு மாரன் தலைமை வகித்தார். துணை தலைவர் சோமன் நாயர் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் முருக வேல் பேசினார். தென்னை நடவு, பராமரிப்பு, தென் னையை தாக்கும் நோய்கள், கட்டு படுத்தும் மருந்துகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. வணிக உதவி வேளாண்மை அலுவலர் ஸ்டீபன், சங்க செயலாளர் செல்வ ராஜ் மற்றும் விவசாயி கள், உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தென்னை வளர்ச்சி வாரியத்தில் சங்கத்தை பதிவு செய்ய வேண்டும் என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## புகையிலை நடவு பணி தீவிரம்

சத்தியமங்கலம், . புஞ்சை புளியம்பட்டி பகுதியில் புகையிலை நடவு பணி தீவிரமடைந்துள்ளது. புஞ்சைபுளியம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளான கணக்கரசம்பாளையம், தாசம்பாளையம், பனையம்பள்ளி, புங்கம்பள்ளி, விண்ணப்பள்ளி, நல்லூர், நொச்சிக்குட்டை, மாதம் பாளையம், காராப்பாடி, காவிலிபாளையம் கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கரில் புகையிலை நடவு பணி துவங்கியுள்ளது. இப்பகுதியில் கடந்த ஒரு மாத

காலமாக பெய்துவரும் பலத்த மழை காரணமாக குளம் குட்டைகளில் நீர் நிரம்பி நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. 3 மாத கால பயிரான புகையிலையை, ஒரு ஏக்கரில் பயிரிட்டு அறுவடை செய்ய ரூ.35 ஆயிரம் வரை செலவாகிறது. பாக்யலட்சுமி, வைரம், கத்திக்கப்பல் உள்ளிட்ட ரக நாற்றுக்கள் இப்பகுதியில் நடவு செய்யப்படுகிறது. இதுகுறித்து தச்சுப்பெருமாள்பாளையத்தை சேர்ந்த விவசாயி கோபால் கூறியதாவது. ஆயிரம் நாற்றுகள் ரு.400 விலையில் வாங்கி நடவு செய்துள்ளோம். ஒரு ஏக்கருக்கு 8 ஆயிரம் நாற்றுகள் தேவைப்படுகிறது. கடந்த ஆண்டு பதப்படுத்தப்பட்ட புகையிலை ஒரு கிலோ ரு.85க்கு விற்பனையானது. ஒரு ஏக்கருக்கு 1 டன் வரை மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த ஆண்டு கூடுதல் விலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

## <u>மாவட்டத்தில் பயிர் கடனுக்கு ரூ945 கோடி ஒதுக்கீடு</u>

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தின் வளம் சார்ந்த கடனாற்றல் ரூ.2201.32 கோடி என நபார்டு வங்கி மதிப்பீடு செய்துள்ளது. இதில் பயிர் கடனுக்கு மட்டும் ரூ.945.74 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலா ளர் தெரிவித்துள்ளார். வங்கிகளுக்கான மாவட்ட ஆலோசனை கமிட்டி கூட்டம் நேற்று ஊட்டியில் நடந்தது. இதில் நீலகிரி மாவட்டத்திற்கான 2015-16ம் ஆண்டிற்கான வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையை மாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டார். முதல் பிரதியினை ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் சரவணன் பெற்றுக் கொண்டார். கலெக்டர் சங்கர் பேசு கையில், இந்திய அரசாங்கத்தின் கொள்கை யான அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காக, சிறு குறு விவசாயிகள் மற்றும் குத்தகை விவசாயிகள், கிராம கைவினையாளர் கள் ஆகியோரின் கூட்டு பொறுப்பு குழுக் களை உருவாக்கி அவர்களுக்கு தேவையான கடன் உதவி யை வங்கிகள் அளிக்க வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டில் வங்கிகள் 1500 கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு கடன் தர வேண்டும் என்ற இலக்கு

நிர்ணயிக்கப்பட்டு உள்ளது, என்றார். நபார்டு வங்கியின் நீலகிரி மாவட்ட வளர்ச்சி மேலாளர் இனிகோ அருள்செல்வன் பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல அரசுத்துறைகள், வங்கிகள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் வளம் சார்ந்த கடனாற்றல் மதிப்பீடான ரூ.2201.32 கோடியில் 70 சதவீதம் வேளாண் கடன் திட்டங்களுக்கும், 17 சதவீதம் பண்ணை சாரா துறை களு க்கான கடன் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 13 சதவீதம் இதர முன்னுரிமை துறைகளுக்கான ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் பயிர் கடன் ரூ.945.74 கோடியாக மதிப்பிடப்பட்டு உள்ளது. வேளாண்துறையில் மத்திய மற்றும் நீண்டகால கடனுக்காக ரூ.603.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்த கடனாற்றல் மதிப் பீட்டில் 27 சதவீதம் ஆகும். நீலகிரி மாவட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள கடனாற்றல் தொகை, நடப்பாண்டை விட 14.58 சதவீதம் அதிகம் ஆகும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தென்மேற்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை வானிலை மையம் தகவல்</u>**




சென்னை, தென் மேற்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதாக வானிலை மையம் தெரிவித்தது.

பருவமழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் அதிக பட்சமாக ராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் 10 செ.மீ. மழை பெய்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக ராமேசுவரத்தில் 7 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் 50-க்கும் மேற்பட்ட இடங்களில் மழை பதிவாகி உள்ளது. வானிலை குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல அதிகாரி எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

தென் மேற்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. அது அந்தமானில் இருந்து வெகு தூரத்தில் உள்ளது.

அநேக இடங்களில் மழை

இதன் காரணமாக தமிழ்நாட்டின் தென் கடலோர மாவட்டங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை அநேக இடங்களில் இன்று (வியாழக்கிழமை) பெய்யும். சில இடங்களில் கனமழை பெய்யும். அதாவது ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் கடலோர பகுதிகளில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும். நாளையும் (வெள்ளிக்கிழமை) கடலோர மாவட்டங்களில் மழை பெய்யும். இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

**வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ரூ.1 கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை**



பெருந்துறை, பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1 கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது.

கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த உற்பத்தியாளர்கள் கொப்பரை தேங்காய்களை விற்பனைக்காக கொண்டுவந்திருந்தார்கள். 2 ஆயிரத்து 803 மூட்டைகளில் மொத்தம் 1 லட்சத்து 20 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை உற்பத்தி யாளர்கள் கொண்டுவந்திருந்தார்கள். இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ 85 ரூபாய் 5 காசு முதல் 94 ரூபாய் 50 காசு வரை ஏலம் போனது. 2-ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ 30 ரூபாய் 65 காசு முதல் 82 ரூபாய் 80 காசு வரை ஏலம் போனது.

ரூ.1 கோடிக்கு விற்பனை

இந்தவிலை கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தின் விலையை விட கிலோவுக்கு 11 ரூபாய் குறைவாகும். தேங்காய் எண்ணையின் விலை குறைந்ததால், கொப்பரை தேங்காய் விலையும் குறைந்ததாக வியாபாரி கள் தெரிவித்தார்கள். நேற்று நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் ரூ.1 கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது.

**தினமும் 3 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்ய நடவடிக்கை கலெக்டர் பேச்சு**

பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்தார்.

கூட்டுறவு வார விழா

பெரம்பலூர் மாவட்டத்தில் அகில இந்திய கூட்டுறவு வார விழா பெரம்பலூரில் நடந்தது. விழாவுக்கு கலெக்டர் தரேஸ் அஹமது தலைமை தாங்கினார். மருதராஜா எம்.பி., தமிழ்ச்செல்வன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு சங்கங் களுக்கு பரிசுகளும், கூட்டுறவு வார விழாவினையொட்டி நடைபெற்ற

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும், பல்வேறு கூட்டுறவு சங்கங் களின் மூலம் 146 பயனாளி களுக்கு ரூ.81 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான கடனு தவிகளையும் மாவட்ட கலெக்டர் வழங்கினார். பின்னர் கலெக்டர் தரேஸ் அஹமது பேசியதாவது:-

3 லட்சம் லிட்டர் பால்

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயி களுக்கு மானாவாரி பயிர் களை விவசாயம் செய்த நாட்கள் போக மீதமுள்ள நாட்களில் பால் உற்பத்தி யின் மூலமே வருமானம் கிடைக் கின்றது. கூட்டுறவுத்துறையின் மூலம் பால் உற்பத்தியா ளர்களுக்கு அதிகளவில் கறவை மாட்டுக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் இலக்கினை எட்டும் வகையில் அனைத்து துறைகளையும் இணைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னோடி மாவட்டமாக தேர்வு

பெரம்பலூர் மாவட்டத்தில் 90 சதவீத மக்களுக்கு ஆதார் அடையாள அட்டை வழங்கப் பட்டுள்ளது. இதன்¢ காரண மாக நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தியா வசிய பொருட்கள் வழங்கும் திட்டத்தில் பொருட்களின் இருப்பு குறித்து குறுந்தகவல் அனுப்பும் திட்டத்திற்கு முன்னோடி மாவட்டமாக பெரம்பலூர் மாவட்டம் தமிழக அரசால் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளது. ரூ.158 கோடி கடன் உதவி பெரம்பலூர் மாவட்டத்தில் கூட்டுறவு துறையின் மூலம் 2011-2012 ஆம்¢ ஆண்டுகளில் ரூ.20 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ள நிலையில் 2014-2015-ம் ஆண்டிற்கு ரூ.100 கோடி பயிர்க்கடன் வழங்க திட்டமிடப்பட்டு தற்போது வரை 14 ஆயிரத்து 999 விவசாயிகளுக்கு ரூ.79.60 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகைக்கடனாக 25,191 பேருக்கு ரூ.71.84 கோடியும், மாற்றுத்திறனாளி கடனுதவியாக 7 பேருக்கு ரூ.3.50 லட்சமும், விவசாய இடுபொருள் பொருளீட்டு கடனாக 12 பேருக்கு ரூ.18.40 லட்சமும், மத்திய கால கடனாக 266 பேருக்கு

ரூ.1.93 கோடியும், 177 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிக் கடனுதவியாக ரூ.3.25 கோடி யும், 22 கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு கடனுதவியாக ரூ.78.44 லட்சமும் ஆக மொத்தம் ரூ.157 கோடியே 64 லட்சம் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்டத் திலுள்ள 53 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ரூ.14.30 கோடி மதிப்பிலான 8,940 டன் உரம் விற்பனை செய்யப் பட்டுள்ளது. மேலும் புது வேட்டக்குடி, இரூர், குரும் பலூர் ஆகிய தொடக்க வோளண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விவசாயி களுக்கு மண் மற்றும் நீர் பரிசோதனைகள் மூலமாக என்ன பயிர்கள் செய்யலாம், எவ்வளவு இடுபொருட்கள் இட வேண்டும் என்பன உள் ளிட்ட ஆலோசனைகள் குறைந்த செலவில் வழங்கப் பட்டு வருகின்றன. இவ்வாறு பேசினார்.

<u>பரிசு-கேடயம்</u>

விழாவில் சிறப்பாக செயல் பட்ட கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சிறப்பாகப் பணிபுரிந்த கூட்டுறவுத்துறை பணியாளர் களுக்கு பரிசுகளும், கேடயங்களும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் முத்துக்குமாரசாமி, ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள் ஜெயக்குமார், கிருஷ்ண குமார், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர்¢ சேகர் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## <u>புதுக்கோட்டை மாவட்டத்தில் பலத்த மழை காரையூரில் அதிகபட்சமாக 54.60 மில்லி மீட்டர் பதிவானது</u>



புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட் டத்தில் பலத்த மழை பெய்தது. காரையூரில் அதிகபட்சமாக 54.60 மில்லி மீட்டர் பதிவானது.

<u>பலத்த மழை</u>

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. புதுக் கோட்டையில் நேற்று முன் தினம் மதியம் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைக ளில் மழைநீர் வெள்ளம் போல தேங்கியது. ஒரு சில தாழ்வான பகுதிகளில் தண்ணீர் புகுந்தது. புதுக்கோட்டையில் பெய்த பலத்த மழை காரணமாக பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள துணை மின் நிலையம், கீழராஜவீதி, மேல ராஜவீதி, தபால் நிலையம், புதிய பேருந்து நிலையம், ஆகிய பகுதி சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் சாலைகளில் வாகனங்களில் செல்வோர் கடும் அவதி அடைந்தனர்.

<u>மழையளவு</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:- ஆலங்குடி-49, அறந் தாங்கி-15, கந்தர்வ கோட்டை-29, கீரனூர்-15, புதுக்கோட்டை- 37, அரிமளம்-16, திருமயம்-18, விராலிமலை-40.20, கறம்பக் குடி-3, மழையூர்-15, ஆயன் குடி-16.40, நாகுடி-22, கட்டு மாவடி-14, ஆவுடையார் கோவில்-17.40, பெருங்களூர்-17, இலுப்பூர்-8, ஆதன கோட்டை-19, உடையாளி பட்டி-13.30, மீமிசல்-24.80, மணமேல்குடி-40, அன்ன வாசல்-10, குடுமியான் மலை -44, பொன்னமராவதி-23, கீழநிலை-5, காரையூர்-54.60 .

**<u>முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 141.65 அடியாக உயர்வு</u>**



தேனி, முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 141.65 அடியாக உயர்ந்துள்ளது. இன்று (வியாழக்கிழமை) 142 அடி என்ற இலக்கினை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தண்ணீர் குறைப்பு முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை சீராக உயர்ந்து வந்தது. அதன்படி கடந்த மாதம் 31-ந் தேதி 136 அடியை நீர்மட்டம் எட்டிய நிலையில், கடந்த 15-ந் தேதி 141 அடியை தொட்டது. அதன்பிறகு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை. இதனால் அணைக்கு நீர்வரத்து குறைந்தது. இதன் காரணமாக நீர்மட்டம் 142 அடி எனும் இலக்கை எட்டுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்காக தண்ணீர் திறக்கும் அளவு நேற்று முன்தினம் வினாடிக்கு 900 கன அடியில் இருந்து 150 கன அடியாக குறைக்கப்பட்டது. இதனால் லோயர்கேம்ப் மின்நிலையத்தில் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இரைச்சல் பாலம் வழியாகவும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 141.40 அடியாக இருந்தது. நீர்வரத்து வினாடிக்கு 1,038 கன அடியாக இருந்தது.

நீர்மட்டம்உயர்வு

நேற்று முன்தினம் தேக்கடியில் 7 மில்லி மீட்டரும், பெரியாறு பகுதியில் 1.2 மில்லி மீட்டரும் மழை பெய்தது. தண்ணீர் திறக்கப்படும் அளவு குறைக்கப்பட்டதாலும், மழை பெய்ததன் காரணமாகவும் அணையின் நீர்மட்டம் நேற்று உயர்ந்தது. இதன்படி நேற்று காலை 6.30 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 141.50 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 928 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து குடிநீருக்காக வினாடிக்கு 147 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் 7 ஆயிரத்து 545 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு இருந்தது. நேற்று மாலை 4 மணியளவில் நீர்மட்டம் 141.55 அடியாக உயர்ந்தது. தொடர்ந்து மாலை 6 மணியளவில்

நீர்மட்டம் 141.65 அடியாக உயர்ந்தது. எனவே அணையின் நீர்மட்டம் இன்று (வியாழக்கிழமை) 142 அடியை எட்ட வாய்ப்பு உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அணையில் முகாமிட்டுள்ள தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகளும் இதனையே தெரிவித்தனர்.

1.5டி.எம்.சி.கூடுதல்

மேலும் இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், 'நீர்மட்டம் 136 அடியாக இருந்த போது 11.20 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு கிடைத்தது. அது 142 அடியாக உயரும் போது 12.70 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும். இதனால் கூடுதலாக 1.5 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு கிடைக்கும்' என்றனர்.

## கார்த்திகை பட்டத்தில் ராகி பயிரிட்டால் நல்ல வருவாய் கிடைக்கும் வேளாண்மை அதிகாரி தகவல்



வேலூர், கார்த்திகை பட்டத்தில் ராகி பயிரிட்டால் நல்ல வருவாய் கிடைக்கும் என்று வேளாண்மை அலுவலர் இளையராஜா தெரிவித்தார்.

இதுகுறித்து வேலூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் இளையராஜா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

ராகி பயிர்

வேலூர் மாவட்டத்தில் தற்போது கார்த்திகை பட்டத்தில் ராகி பயிரிட்டால் நல்ல வருவாய் கிடைக்கும்.

குறைந்த நீர், உரம், மருந்து பயன்படுத்தி ராகி பயிரில் நல்ல மகசூல் பெறலாம். பயிரிட ஏற்ற ரகங்கள் கோ13, கோ 15, (குளை நோய் தாக்கி வளரக்கூடியது) டிரை1 (கந்தக மண்ணுக்கு ஏற்ற ரகம்) ஆகும். இவற்றில்

ஏதாவது ஒரு ரகத்தினை தேர்வு செய்து முளைப்பு திறன் பரிசோதனை செய்து, நல்ல தரமான விதையினை எக்டருக்கு 5 கிலோ என்ற அளவில் 3 மீட்டருக்கு 1.5 மீட்டர் அளவிலான 6 மேட்டுப்பாத்திகள் அமைத்து விதைகளை விதைப்பு செய்ய வேண்டும். பின்னர் 17 முதல் 20 நாள் வயதுடைய நாற்றுக்களை குத்துக்குத்து 15 செ.மீ மற்றும் வரிசைக்கு வரிசை 15 செ.மீ இடைவெளியில் நடவு செய்து நட்ட 3–வது நாள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

நல்ல வருவாய்

பின்னர் மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை பாய்ச்ச வேண்டும். அதிக மகசூல் எடுப்பதற்கு விதையின் தரம் மிகவும் முக்கியம். விதையின் தரத்தினை அறிய விவசாயிகள் தங்கள் கைவசம் வைத்திருக்கும் விதைகளை விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன் 100 கிராம் அளவுள்ள விதைகளை விதை பரிசோதனை நிலையத்தில் ரூ.30 கட்டணம் செலுத்தி விதையின் தரத்தினை பரிசோதித்து விதைப்பதன் மூலம் அதிக மகசூல் பெற்று நல்ல வருவாய் பெறலாம்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## 36 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.15,417 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது அமைச்சர் மோகன் பேச்சு



விழுப்புரம், தமிழகம் முழுவதும் கடந்த 3 ஆண்டுகளில் 36 லட்சம் விவசாயி களுக்கு ரூ.15,417 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளதாக விழுப்புரத்தில் நடந்த கூட்டுறவு வார விழாவில் அமைச்சர் மோகன் பேசினார்.

கூட்டுறவு வார விழா

விழுப்புரத்தில் 61-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா விழுப்புரம்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கூட்ட அரங்கில் நேற்று மாலை நடைபெற்றது. விழா விற்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். எம்.பி.க்கள் லட்சுமணன், ஏழு மலை, முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், நகரமன்ற தலைவர் வக்கீல் பாஸ்கரன் ஆகியோர் முன் னிலை வகித்தனர். மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் முரளி என்கிற ரகுராமன் வரவேற்றார். கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர் சந்திர சேகரன் திட்ட விளக் கவுரையாற்றினார். விழாவில் தமிழக ஊரக தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மோகன் கலந்து கொண்டு 71 பேருக்கு ரூ.1 கோடியே 17 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

பயிர் கடன் தமிழ்நாட்டை பொறுத்த வரை ஜெயலலிதா ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் கூட்டுறவு இயக்க தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்த நடவடிக்கை எடுத்தார். தற்போது தேர்ந்தெடுக்கப் பட்ட நிர்வாகிகளால் கூட்டு றவு சங்கங்களில் மக்களாட்சி முறை நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் மாநில அளவில் தலைமை கூட்டுறவு வங்கியும், மாவட்ட அளவில் 23 மத்திய கூட்டுறவு வங்கிகளும், கிராம அளவில் 4,530 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களும் திறம்பட செயல்பட்டு வருகின்றன. 31-3-2014 நிலவரப்படி ரூ.4 ஆயிரத்து 500 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 10 லட்சத்து 46 ஆயிரத்து 839 விவசாயிகளுக்கு ரூ.4 ஆயிரத்து 716 கோடியே 16 லட்சம் பயிர் கடன் வழங்கப் பட்டுள்ளது. 2014-2015-ல் ரூ.5 ஆயிரம் கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடந்த அக்டோபர் மாதம் வரை 6 லட்சத்து 34 ஆயிரத்து 54 விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரத்து 252 கோடியே 37 லட்சம் பயிர் கடன் வழங் கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 36 லட்சத்து 17 ஆயிரத்து 412 விவசாயிகளுக்கு ரூ.15,417 கோடி பயிர் கடன் வழங் கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும், 235 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

சங்கங்களும், 3 மலைவாழ் மக்கள் பயன் பெறும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் உள்பட 345 கூட்டு றவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சங்கங்கள் மூலம் இதுவரை 40 ஆயிரத்து 663 விவசாயிகளுக்கு ரூ.223 கோடியே 65 லட்சம் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 5 ஆயிரத்து 300 விவசாயிகளுக்கு, ரூ.29 கோடியே 15 லட்சம் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. மக்களுக்கு உணவு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதற் காக விலையில்லா அரிசியை மக்களுக்கு வழங்க பதவி ஏற்ற நாளிலேயே ஜெயலலிதா உத்தரவிட்டார். நீண்ட பல ஆண்டுகளாய் கூட்டுறவு இயக்கம் நமது நாட்டில் இயங்கி வந்ததன் காரணமாக அது பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற் றுள்ளது. ஆனால் கூட்டுறவு இயக்கம் அடைந்த வளர்ச்சிக் கேற்ப அதில் ஈடுபட்டுள்ள மக்களிடையே கூட்டுறவு உணர்வு பரவ வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளில் மக்க ளிடையே ஆர்வம் பெருக வேண்டும்.சமூகம் முழுவதி லும் இந்த கூட்டுறவு இயக்கம் நன்கு ஊடுருவ இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் பாடுபட வேண்டும். இவ்வாறு அமைச்சர் மோகன் பேசினார். கலந்து கொண்டவர்கள்

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜானகிராமன், அழகுவேல்பாபு, நாகராஜன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் அலமேலுவேலு, மாவட்ட நுகர்வோர் கூட்டு றவு பண்டக சாலை தலைவர் பசுபதி, மாவட்ட கூட்டுறவு அச்சக தலைவர் கலியமூர்த்தி, விழுப்புரம் நகர கூட்டுறவு வங்கி தலைவர் இ.சுப்பிரமணி யன், சி.எம்.எஸ்.தலைவர் மந்தகரை ஜானகிராமன், மாவட்ட ஜெயலலிதா பேரவை தலைவர் நெடுஞ்செழியன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் விநாயகமூர்த்தி நன்றி கூறினார்.